Registered as a News Paper in Sri Lanka. பக்கங்கள்: 04 விலை ரூபா: 3-50

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம் 01 பிரமோதூத ஹூ ஐப்பசி மீ 13 உ செவ்வாய்க்கிழமை (30 - 10 - 1990) ஹிஜ்ரி 1411 ர. ஆகிர். 10 ஓசை 245

## கல்வித் திணைக்களத்தில் அதிகாரிகள் இல்லை

(யாழ்ப்பாணம்)

யாழ். கல்வித் திணைக்களத்தில் நேற்றுத் திங்கட்கிழமை காலை பத்து மணி ஆகியும் கல்வி அதிகாரிகள் எவரையும் கடமையின் பொருட்டு அவர்களின் அறையில் காணவில்லை. ஓய்வூதியக் கிளை பூட்டுப் போட்டுப் பூட்டப்பட்ட நிலையில் இருந்தது. நிர்வாக அதிகாரியும் கடமையில் இருக்கவில்லை.

(4ஆம் பக்கம் பார்க்க)

வந்தாறுமூலையில் புலிகளால் இராணுவத்தினரின் பவல் உட்பட

# இரண்டு வாகனங்கள் அழிப்பு;

# பல படை பலி; பலர் படுகாயம்!

## மேஜர் கண்ணன் உட்பட மூன்று புலிகள் வீரமரணம்

(மட்டக்களப்பு)

வந்தாறுமூலை பல்கலைக்கழகத்திற்கு அண்மையில் விடுதலைப்புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் நேற்றுமுன்தினம் ஏற்பட்ட மோதலில் ஒரு பவல் வாகனம் உட்பட இரண்டு இராணுவ வாகனங்கள் அழிக்கப்பட்டன. ஒரு மணித்தியாலத்திற்கு மேல் நடந்த இச்சண்டையில் பல இராணுவத்தினர் கொல்லப்பட்டதோடு, பலர் படுகாயம் அடைந்தனர். விடுதலைப்புலிகள் தரப்பில் மேஜர் கண்ணன் உட்பட மூவர் வீரமரணமடைந்தனர்.

இச் சம்பவம் பற்றித் தெரியவருவதாவது செங்கலடி இராணுவ முகாமில் இருந்து நேற்று முன்தினம் காலை 8. 30 மணியளவில் பவல், ஜீப் ஆகிய இரு வாகனங்கள் சகிதம் கால்நடையாக சிறிலங்கா இராணுவத்தினர் வெளியேறி வந்தனர்.

வெளியேறி வந்த இராணுவத்தினரின் வாகனங்கள் மீது வந்தாறுமூலை பல்கலைக்கழகத்திற்கு அண்மையில் வைத்து தமிழீழ விடுதலைப் புலிகளால் கால்கஸ்ரோ தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இத் தாக்குதலால் சிறிலங்கா இராணுவத்தினர் வந்த பவல், ஜீப் ஆகிய இரு வாகனங்களும் முற்றாகச் சேதமுற்றன.

இச் சம்பவத்தின் பின்னர் பாதிப்புற்ற இராணுவத்தினருக்கு உதவியாக மொறக்கொட்டாஞ்சேனை இராணுவ முகாமில் இருந்து இரண்டு பவல் வாகனங்களுடனும், ஒரு இராணுவ ட்றக் ஆகிய மூன்று வாகனங்களுடனும் வந்த சிறி

(4 ஆம் பக்கம் பார்க்க)

## முல்லைத்தீவு மோதலில் ஓர் இராணுவம் பலி

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு இராணுவ முகாமில் இருந்து வெளியேற முயன்ற இராணுவத்தினர் மீது விடுதலைப்புலிகள் தாக்குதலை மேற்கொண்டதில் ஒருவர் பலியானார். இதனை யடுத்து இராணுவம் பின்வாங்கிச்சென்றது.

நேற்று முன்தினம் மாலை ஐந்துமணியளவில் முல்லைத்தீவு இராணுவ முகாமிலிருந்து மாதிரிக் கிராமத்தை நோக்கி

(4 ஆம் பக்கம் பார்க்க)

## மாவிட்டபுரத்தில் இருபடை பலி

(தெல்லிப்பளை)

நேற்று முன்தினம் மாலை 3-00 மணியளவில் மாவிட்டபுரம்கந்தசுவாமிகோயில்பகுதியில் காவல் கடமையில் ஈடுபட்டிருந்த சிறிலங்கா இராணுவத்தினர் மீது புலிகள் நடாத்திய சினைப்பர் தாக்குதலில் இரண்டு இராணுவத்தினர் பலியாகினர். (ச)

## மேஜர்கண்ணன் வீரமரணம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ளசெங்கலடி இராணுவ முகாமைச் சேர்ந்த இராணுவத்தினருடனான மோதலில் வீரமரணமடைந்தமேஜர் கண்ணன் (செல்லையா உதயன்) 1984ஆம் ஆண்டில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தில் சேர்ந்து கொண்டவர்.

விடுதலையுணர்வும், இலட்சிய வேட்கையும் உடைய மேஜர் கண்ணன் சிறிலங்கா

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ஊர்காவற்படை, ராணுவம்மீது மீராவோடையில் தாக்குதல்

(மட்டக்களப்பு)

முஸ்லிம் ஊர்காவற்படையினர் மீதும், சிறிலங்கா இராணுவத்தினர் மீதும்விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலால் ஊர்காவற்படை, இராணுவத் தரப்பில் பெரும் இழப்புக்கள் ஏற்பட்டன.

மீராவோடையில் உள்ள முஸ்லிம் ஊர்காவற்படையின

(4 ஆம் பக்கம் பார்க்க)

## எந்த நெருக்கடியையும் எதிர்நோக்க நாம் தயார்

– ரஞ்சன்

(கொழும்பு)

''இந்தியாவால் ஏற்படக்கூடிய எந்தவொரு நெருக்கடியையும் எதிர் நோக்க நாம் தயாராகவுள்ளோம்'' என கொழும்பில் பத்திரிகையாளர் ஒருவர் கேட்ட கேள்விக்குப் பதிலளித்தபோது அமைச்சர் ரஞ்சன்விஜயரெட்ணா தெரிவித்தார். (4ஆம் பக். பார்.)

## அதிகாரியைத் தாக்கிவிட்டு கைதானவர் தப்பிவந்தார்

(வயாவிளான்)

வயாவிளான் பகுதியில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தின் அதிகாரி நிலைதடுமாறி நிற்க, சிப்பாய்கள் புலிகளின் தாக்குதலுக்கு அஞ்சி ஓட்டம் எடுக்க, கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்ட ஒருவர் அதிகாரியை பலமாகத் தாக்கிவிட்டு சாதுரியமாகத் தப்பி வந்துள்ளார்.

நேற்று நடைபெற்ற இச் சம்பவம் பற்றித் தெரியவருவதாவது:-

தனது வீட்டில் இருந்து

(4 ஆம் பக்கம் பார்க்க)

புலிகள் முகாமை

## முற்றுகையிட முயன்ற இராணுவம் இழப்புகளுடன் பின்வாங்கியது

(திருமலை)

தமிழீழ விடுதலைப் புலிகளின்முகாமைச் சுற்றிவளைக்க முயன்ற மூன்று இராணுவ முகாம்களைச் சேர்ந்த சிறிலங்கா இராணுவத்தினர் விடுதலைப்புலிகளின் எதிர்த்தாக்குதலால் பாரிய இழப்புகளுடன் பின்வாங்கியுள்ளனர். பலர் மிதிவெடிகளில் சிக்குண்டனர்.

கடந்த புதன்கிழமை திருக்குணாமடு, கல்லாறு, யானைக்கடவை ஆகிய இராணுவமுகாம்களில் இருந்து விடுதலைப் புலிகளின் முகாமைச் சுற்றி வளைக்கும் நோக்கோடுவெளியேறி வந்த சிறிலங்காஇராணு

(4ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.போதனா வைத்தியசாலை நாளைமுதல் பழைய இடத்தில்

(மானிப்பாய்)

மானிப்பாய் கிறீன் மருத்துவமனையில் இயங்கி வந்த யாழ். போதனா வைத்தியசாலை நாளை முதல் மீண்டும் பழைய இடத்தில் இயங்கவுள்ளது.

கடந்த கால சிறிலங்கா இராணுவத்தின் கண்மூடித்தனமான தாக்குதல்களைத் தொடர்ந்து பாதுகாப்புக் கருதி மானிப்பாயில் இயங்கி வந்த போதனா வைத்தியசாலைப் பிரிவு நாளை 31 . 10 . 90 (புதன்கிழமை) முதல் மீண்டும் பழைய இடத்திலேயே இயங்கும் என செஞ்சிலுவைச் சங்கத் தலைவர் தெரிவித்துள்ளார். (ச)

## ''லங்காசிறி'' வந்தது

(பருத்தித்துறை)

நேற்றுக்காலை 'லங்காசிறி' என்ற கப்பல் 1700 தொன் நிறையுடைய பொருள்களுடன் பருத்தித்துறைத் துறைமுகத்தை வந்தடைந்துள்ளது.

இதில் உலர் உணவுப் பொருள்களும், விசர் நாய்க்கடிக்கான மருந்துகளும், இலங்கை வங்கிக்குரிய ஐம்பது இலட்சம் ரூபாவும், வந்துள்ளதாகத் தெரிய வருகிறது.

இவற்றுடன் இலங்கைவங்கியின் முக்கிய அதிகாரி ஒருவரும் வந்துள்ளார். (ச)

## படையினரின் தாக்குதலால் முஸ்லிம் ஒருவர் பலி

(வவுனியா)

வவுனியாவில் காவல் சோதனை முகாமிலிருந்த இராணுவத்தினரின் தாக்குதலினால் முஸ்லிம் ஒருவர் இறந்தார். மேலும் இரு முஸ்லிம்கள் படுகாயமடைந்தனர்.

இச்சம்பவம் சிலதினங்களுக்கு முன்னர் வவுனியா

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ''சார்க்'' உச்சி மாநாட்டிற்கு பிரேமதாஸா செல்லவில்லை

(மாலே)

மாலைதீவில் நடைபெற இருக்கும் ''சார்க்'' உச்சி மாநாட்டில் தாம் கலந்து கொள்ளப்போவதில்லை என இலங்கை ஜனாதிபதி ஆர். பிரேமதாஸா அறிவித்துள்ளார்.

மாலேயில் உள்ள தற்காலிக இலங்கை உயர்ஸ் தானிகர் ஏ. எஸ். நகர்தாலா மாலைதீவுவெளியுறவுத்துறைஅமைச்சரைச் சந்தித்து இதனைத் தெரிவித்தார்.

இதில் ஜனாதிபதி இந்த

(4ஆம் பக்கம் பார்க்க)

## அவசர சிகிச்சைக்காக கொழும்புக்குச் செல்வோர்விபரம்

(மானிப்பாய்)

அவசர சிகிச்சைக்காக கொழும்பு செல்வதற்கு செஞ்சிலுவைச்சங்கத்தினால்தெரிவு செய்யப்பட்டவர்கள் எதிர்வரும் வியாழக்கிழமை அழைத்துச்செல்லப்படவுள்ளனர்.

இவர்கள் பிரயாணத்தின் போது தமக்கு மூன்று நாட்களுக்குத் தேவையான உணவும், குடிநீரும், ஒரு வாரத்திற்குரிய மருந்து மாத்திரைகளும் (பயன்படுத்துவோர் மட்டும்) கொண்டுவரல் வேண்டும்.

(4ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

**நியூ வீனஸ்**
**NEW VENUS**

எமது அன்பான வாடிக்கை யாளருக்கு ஒரு வேண்டுகோள் எமது ஸ்தாபனம் 153 A பலாலி வீதியில் (விவசாய பாடசாலை அருகில்)(NEAR FARM SCHOOL) நடை பெறுகின்றது. சகல மணிக் கூடுகளும், றேடியோக்களும் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும். சகல எலெக்ரோனிக் கடிகாரங் களின் பற்றறிகளும் விற்ப னைக்குண்டு (B/1509)

**டில்கா வாச் வேக்ஸ்**
**[Dilka Watch Works]**

வாடிக்கையாளரின் வசதிக் கமைய எமது ஸ்தாபனம் மானிப்பாய் வீதி, ஆனைக் கோட்டையில் (கிராம சபைக் கருகில்) நடைபெறுகின்றது. சகல மணிக்கூடுகளும், றேடி யோக்களும் உத்தரவாதத்து டன் திருத்திக் கொடுக்கப் படும். சகல எலெக்ரோனிக் கடிகாரங்களின் பற்றறிகளும் விற்பனைக்குண்டு (B-1510)

**ரதி வோச் வேக்ஸ்**

ரதிவோச் வேக்ஸ் அன் ஸ்ரோர்ஸ் இல. 14 கஸ்தூரி யார் வீதியில் இருந்து இல. 12 பொன்னையா லேன் ஆறு கால்மடம் ஆனைக்கோட்டை யில் (பிடாரி கோயில் உப தபால் அலுவலகத்திற்கு அருகில்) இயங்கி வருகின்றது என்பதை எமது வாடிக்கை யாளர்களுக்கு அறியத்தருகின் றோம். திருத்துதல் வேலை யும் நடைபெற்றுக் கொண்டி ருக்கின்றது (B-1527)

**யாழ்/முச்சக்கர மோட்டார் வண்டிச்சங்க அறிவித்தல்**

வட பிராந்தியத்தில் சேவை யில் ஈடுபடுத்தப்படும் முச்சக் கர மோட்டார் வண்டிகளும். சாரதிகளும் 5-11-90 க்கு முன் சங்க காரியாலயத்தில் பதிவு செய்யுமாறு வேண்டப்படுகின் றனர். தவறிய சாரதிகளும், முச்சக்கர மோட்டார் வண்டி களும் 6-11-90 க்கு பின் சேவையில் ஈடுபட முடியாது. இல.28 இராச வீதி, கல்வியங் காடு, யாழ்ப்பணம்.
(B/1539) உபதலைவர்


# அதிக பொருள் கொள்வனவு; இராணுவத்தினரின் தொந்தரவு

(வவுனியா)

வவுனியா நகரப் பகுதியிலிருந்து எப்பொருளாயினும் அதிக அளவில் கொள்வனவு செய்து கொண்டுவரப்படும் போது இராணுவத்தினரின் கெடுபிடிகளை எதிர்கொள்ள நேரிடுகிறது என்று வவுனியா பூந்தோட்டம் சந்தைப் பகுதியில் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள வியாபாரிகள் பலர் தெரிவித்தனர்.

மேற்படி காரணத்தினாலேயே பொருள்களின் விலைகளை அதிகரிக்க வேண்டியுள்ளதாகவும், குறிப்பிட்ட சில பொருள்களை மட்டும் கொண்டு செல்வதற்கே இராணுவத்தினரால் தடை விதிக்கப்பட்டுள்ளது என்பது உண்மைக்குப் புறம்பானது என்றும் எந்தப் பொருளாயினும் அதிக அளவில் கொள்வனவு செய்து கொண்டுவரும் போது இராணுவத்தினரின் சந்தேகக் கண்களுக்கு உட்பட வேண்டியுள்ளது என்றும் வியாபாரிகள்தெரிவித்தனர். (நி)

# வட-கிழக்கு பருவமழையினால் தமிழ் நாட்டில் பலத்தசேதம்

(சென்னை)

வட-கிழக்குப் பருவமழை தமிழ் நாட்டின் பல பகுதிகளிலும் பரவலாகப் பெய்து வருகிறது. நீலகிரி மாவட்டத்தில் மாத்திரம் மழையினால் ரூபா 5கோடிசேதமேற்பட்டுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது 500 குடும்பங்கள் நீலகிரியில் வெள்ளத்தினால் பாதிக்கப் பட்டுள்ளன. இங்கு 200 க்கும் மேற்பட்ட காவல்துறையினருடன் தீயணைப்புப் படையினரும் நிவாரணப் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

தமிழ் நாட்டில் பல இடங்களிலும் குளங்கள் நிரம்பியுள்ளன. சிதம்பரனார் மாவட்டத்திலும் பாசனக் குளங்கள் நிரம்பி வழிகின்றன.

அடுத்த 24மணிநேரத்தில் தமிழ் நாட்டில் பருவமழை மேலும் தீவிரமடையும் என வானிலை அறிக்கை தெரிவிக்கின்றது.

## ‘யுனிசெப்’ உதவிடன் மருந்துகள் வந்தன

(ஊர்காவற்றுறை)

புங்குடுதீவு அரசினர் ஆஸ்பத்திரிக்கும், நெடுந்தீவு அரசினர் ஆஸ்பத்திரிக்கும் அத்தியாவசிய மருந்துகள் வந்து சேர்ந்துள்ளன.

யுனிசெப் நிறுவனத்தினரால் அன்பளிப்பாக வழங்கப்பட்ட இம் மருந்துகளை வட பிராந்திய சுகாதார சேவை அத்தியட்சகர் அனுப்பி வைத்துள்ளார். இம் மருந்துகள் பலத்த சிரமததின் மத்தியில் அராலிக் கடல் வழியாக இப் பகுதிகளுக்கு எடுத்து வரப்பட்டன. (15)

## அதிபரின் கோரிக்கை

(பூநகரி)

பூநகரி மகாவித்தியாலய அதிபர் திரு. பரஞ்சோதி மாணவர்களின் பாதுகாப்பிற்காக பாடசாலை வளவில் பாதுகாப்பு அரண்களை அமைக்க நடவடிக்கை எடுத்துள்ளார்

இதற்கு தேவையான சாக்குகள், மரங்கள் - போன்றவற்றை தந்து உதவுமாறு பாடசாலை மாணவர்களையும், பெற்றோரையும் கோரியுள்ளார். (71)

## நிவாரண உதவி

(தீவுப்பகுதி)

மண்டைதீவு, அல்லைப்பிட்டி, ஊர்காவற்றுறை, யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்து மண்கும்பான், வேலணைப் பகுதிகளில் அகதிகளாக வந்து தங்கியுள்ள மக்களுக்கு வேலணை சாட்டி புனித மாதா தேவாலயத்தில் வைத்து கத்தோலிக்க நிறுவனங்களினால் நிவாரணமாக அரிசி, சீனி, லக்ஸ்பிறே போன்ற உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன. (15)

## மாவீரர் தின ஏற்பாடுகள்

(ஊர்காவற்றுறை)

அடுத்தமாதம் நடைபெறவிருக்கும் மாவீரர் தினத்திற்கான ஏற்பாடுகள் தீவுப்பகுதியில் செய்யப்பட்டு வருகின்றன.

இத்தினத்தை தீவுப்பகுதியில் பெருவிழாவாக எடுப்பதென்றும் வேலணை வங்களாவடியில் அன்றைய தினம் பொதுச் சந்தையொன்றை திறந்து வைப்பதென்றும், தீவுப்பகுதிவீதிகளுக்குமாவீரர்களின் பெயர்களைச் சூட்டவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (15)

## மரண அறிவித்தல்
### அருட்செல்வி ஆபரணம் திறினிற்றி

(திருக்குடும்பக் கன்னியர் மடம் — இளவாலை)
அருட்செல்வி ஆபரணம் திறினிற்றி
29 - 10 - 1990 திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்

இவர் காலம் சென்ற அலேசுப்பிள்ளை ஆபரணம், யோவான்பிள்ளை சலோமைப்பிள்ளை ஆகியோரின் அன்பு மகளும், ஞானப்பிரகாசம், அலேசுப்பிள்ளை (செல்வராசா) யோவான்பிள்ளை (இராசதுரை) இம்மனுவேல் மேரி யோசப் (இராசநாயகம்) பிலோமினா, அருட்திரு சிங்கராயர் அ.ம.தி. ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார். இவரது இறுதிச்சடங்குகள் இளவாலை திருக்குடும்ப கன்னியர் இல்லத்தின் சிற்றாலயத்தில் 30 - 10 - 90 செவ்வாய்க்கிழமை (இன்று) காலை 10-00 மணிக்கு திருப்பலியோடு இடம்பெறும்.

தொடர்பகம் (R/778) தகவல்:
யாழ்ப்பாணம். அருட்திரு ஆ சிங்கராயர் அ.ம.தி.

## 45 ஆவது நாள்
# வீர நினைவு அஞ்சலி

கோட்டையிலே எமது கொடிபறக்கும் வேளையிலே-எதிரியின் துப்பாக்கிக்குண்டு மார்புதனைத் துளைத்திட தமிழ் அன்னையின் மடிதனில் தலைவைத்து வீர மரணம் அடைந்த இளம் வீரவேங்கை



## “சுபாசினி”
(செல்வி சின்னக்கண்டு சரஸ்வதி)

| தமிழ்த்தாய் மகிழ்ந்திட மலர்வு: | தமிழ்த் தாயகம் மலர்ந்திட உதிர்வு: |
|---|---|
| 24 - 04 - 1973 | 16 - 09 - 1990 |

பிள்ளைக்கனியமுதே! கிள்ளைமொழிபேசி மகிழ்ந்தவளே!
வெள்ளைப்புறாவென நீவளர்ந்தாய்! எம் உள்ளமதைக்
கொள்ளைகொண்டாய்
எம் அல்லிமலரே அருமைக்கிளியே! பள்ளிப் படிப்பினிலே
நீ வல்லவளானாய்!
எல்லோர்க்கும் நீ நல்லவளானாய்! நற்பண்பிலே
சிகரமாய்ச் சிந்தனைச் சுடரானாய்!
சீற்றமிகு புலியானாய்! செங்குருதிக் களத்திலே நீ
குதித்திட்டாய் - உன்
பங்குதனைச் செலுத்திட, தமிழ் அன்னையவள்
கரங்களில் பூட்டிட்ட
அடிமை விலங்கினை உடைத்திட பெரும்புலியானாய்!
களத்திலே
கொலைவெறி கொண்ட கயவர்களின் கதைபல
முடித்தாய்!...
கோளைகளின் துப்பாக்கிக் குண்டு ஒன்று தாயே
உன் நெஞ்சுதனைத் துளைத்துச் சென்றதுவோ......!

இமையாணன், அன்பு அம்மா, ஐயா,
உடுப்பிட்டி. சகோதர சகோதரிகள்,
(R/779) உற்றார், உறவினர்.


## வியாழன் முதல் வெளிவருகின்றது

### “உதிக்கும் திசை நோக்கி உன்னத பயணம்”

எதிர்வரும் வியாழன் (01. 11. 90)
14. 09. 90 முதல் 24. 10. 90 வரை

தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதித் தலைவர் மாத்தயாவுடன் கிழக்கு மாகாணம் சென்று திரும்பிய ஒருவரின் பயண அனுபவங்கள்.


## தசாக அழைப்பிதழ்

**பிரம்மஸ்ரீ கி. நாராயண சாஸ்திரிகள்**
**கோண்டாவில்**

பிரமோதூத வருட ஐப்பசி மீ 05 ஆம் நாள் (22. 10. 1990) மாலை சிவபதமடைந்த
**பிரம்மஸ்ரீ கி. நாராயண சாஸ்திரி அவர்களின்**
அந்திமக் கிரியைகள் பின்வரும் தினங்களில் நடைபெறும்.

31. 10. 1990 புதன்கிழமை காலை 10-00 மணி தசாகம்
01. 11. 1990 வியாழக்கிழமை ஏகோதிஷ்டம் - மாசிகம்
02. 11. 1990 வெள்ளிக்கிழமை சபிண்டீகரணம்
03. 11. 1990 சனிக்கிழமை கிரகயக்ஞம் சமாராதனை

தனிப்பட்ட அழைப்பிதழ் அனுப்ப முடியாமைக்கு வருந்துகின்றோம்.

கோண்டாவில் மேற்கு, இங்ஙனம்
கோண்டாவில். குடும்பத்தினர்
(R. 775)


உங்கள் தற்போதைய உடனடித் தேவைகளுக்கு
❋ வீட்டு மின்னிணைப்புகள் ❋ பிளம்பிங் வேலைகள்
❋ வெல்டிங் ❋ மோட்டர் றிவைன்டிங்
மற்றும் சகல மின்சார வேலைகளும் சலுகை அடிப்படையில் உடனுக்குடன் செய்து கொடுக்கப்படும்.

## ஜெகஜோதி என்ஜினியறிங் வேக்ஸ்
41, பஜார் லேன், யாழ்ப்பாணம்.
(B/1481) பதிவு இல. 4376.

## சிந்தனைக்கு

சுதந்திரமாய் இருக்க உறுதி கொண்ட மனிதன் மீது அடிமைத் தளையைப்பூட்டுவதைவிட, நிலையான மலையை அடியோடு பெயர்த்து, அப்பால் எறிவது கூட எளிதானது.

— ராபர்ட் ஸதே

ஈழநாதம்

31, வைமன்வீதி, யாழ்ப்பாணம 30-10-90
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வா...ம்: 2208
த.பெ எண் 05

# பிரச்சினை தீரும்வரை சவாலாகத்தான் இருக்கும்

“ஜே. வி. பியை அடக்கினோம். வெளிநாட்டுத் துருப்புக்களை வெளியேற்றினோம். இப்போது வடக்கு, கிழக்கு சவால் மாத்திரமே தொடர்ந்து இருந்து வருகின்றது” என நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்ற ஐ. தே. க. செயற்குழுக் கூட்டத்தில் பேசுகையில் சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாஸா தெரிவித்துள்ளார்.

இதில் ஜே. வி. பியை அடக்கினோம் என்பது முழுமையாக ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இல்லாவிடினும், சிறிலங்கா அரசாங்கம் இடைக்கால வெற்றி ஒன்றைப் பெற்றுள்ளது என்பது ஏற்றுக்கொள்ளக்கூடிய விடயம்தான். ஆனால் அரசாங்கம் அடைந்த வெற்றிக்கு ஜே வி பியின் தலைமையும், அவர்களின் போராட்ட யுகதியுமே காரணமேதவிர அரசாங்கத்தின் சாதுரியம் காரணமில்லை.

ஏதோ ஒரு வழிமுறையைக் கையாண்டு ஆட்சியைப் பிடித்தால் போதும் என்ற நோக்கில் செயற்பட்ட ஜே வி.பி. தலைமை ஒருக்கால் ஆயுதப்போராட்டம், அது தோல்வியில் முடியத் தேர்தல், பின்னர் அதிலும் தோல்வியடைய ஆயுதப் போராட்டம் என போராட்ட வடிவத்திலேயே தெளிவான கொள்கை கொண்டிருக்கவில்லை.

அதேபோன்றே தமது இலக்கையும் தெளிவாகக் கொண்டிருக்கவில்லை இந்திய எதிர்ப்பு வாதம் ஒன்றை மட்டுமே தெளிவாகக் கொண்டிருந்தது. இந்த நிலையில் 1987 ‘இந்திய – இலங்கை சமாதான ஒப்பந்தம்’ கைச்சாத்தாகியதுடன் இந்திய இராணுவம் வடக்கு - கிழக்கில் கால்வைத்ததே போராட்டத்திற்கான காரணம் தேடிய ஜே. வி. பியினருக்கு கைகொடுத்தது.

மேலும் ஜே. வி. பியினர் கையாண்டயுக்திகள்சிங்கள மக்களை பயமுறுத்தியது அவர்களால் மேற்கொண்ட பொருளாதார இலக்குகளை அழித்தல், தொடர்ச்சியான ஹர்த்தால் என்பன மக்களுக்கு மேலும் நெருக்கடியைக் கொடுத்தன. இந்த நிலையில் ஆயுதப்படையினர் குடும்பங்கள் மீது அவர்கள் மேற்கொண்ட தாக்குதல்கள் அவர்களுக்கு அழிவைக் கொண்டுவந்து சேர்த்தன.

நாட்டைப் பாதுகாப்பதை விடுத்து குடும்பத்தைப் பாதுகாக்கவாவது ஜே.வி.பி. யினரை அழித்தொழித்தல் தவிர வேறு வழியில்லை என்ற நிலையை ஆயுதப் படையினருக்கு ஏற்படுத்தியது இதே வேளையில், ஜே. வி. பி. யினரின் சீரமைக்கப்படாத யுக்த தந்திர முறை அவர்களின் தலைமையை எதுவித எதிர்ப்புமின்றி மிக இலகுவாக இராணுவத்தினரால் கைது செய்யவும் வாய்ப்பைக் கொடுத்தது. இதனால் ஜே. வி. பி. யினரை இராணுவத்தினர் அடக்குவது எளிதாக முடிந்தது.

இரண்டாவதாக இந்திய இராணுவத்தை சிறிலங்கா அரசாங்கம் தான் வெளியேற்றியதாகப் பெருமைப்பட்டுக் கொள்வதில் எந்தவித உண்மையும் இல்லை. தொடர்ச்சியான விடுதலைப் புலிகளின் இராணுவ ரீதியான நெருக்குதலும். இந்தியாவில் ஏற்பட்ட அரசியல் மாற்றமுமே இந்திய இராணுவம் இலங்கையை விட்டு வெளியேறியமைக்குக் காரணங்களாகும். தமிழரின் உரிமைகளைப் பணயம் வைத்து விடுதலைப் புலிகள் இந்தியாவின் நலனுக்கு விட்டுக் கொடுப்புக்கள் செய்திருந்தால் இந்திய இராணுவ வெளியேற்றம் என்பது சிறிலங்கா அரசிற்கு பகற்கனவாகவே இருந்திருக்கும்.

இவ்வாறாக ஜே.வி.பி. யின் தவற்றையும், விடுதலைப் புலிகளின் வெற்றியையும் தமது வெற்றியென பிரேமதாஸா தம்பட்டம் அடித்துக்கொண்டாலும், வடக்கு -கிழக்குப் பிரச்சினை சவால்விடும் பிரச்சினையாக உள்ளது என்ற உண்மையை அவர் ஒப்புக் கொண்டுள்ளார். இதற்கு வடக்கு கிழக்குப் பிரச்சினை முன்னைய பிரச்சினைகள்போல் அல்லாது வேறு வடிவம் கொண்டதே காரணமாகும்.

இப்பிரச்சினை தமிழ் மக்களின் உரிமையுடனும் எதிர்கால வாழ்க்கையுடனும் சம்பந்தப்பட்டது இப்பிரச்சினை பேரம் பேசுவதற்கோ விட்டுக் கொடுப்பதற்கோ இடமில்லாதது. நேரான, தெளிவான இலக்கைக் கொண்டது. இவற்றிற்கும் மேலாக மக்களின் ஆதரவுடன் பலமான தலைமையினால் பலவருட அனுபவத்தோடும், சிறந்த யுக்திகளோடும் வழிநடத்தப்படுவது.

எனவே தமிழ் மக்களின் உரிமைகள் நிலைநிறுத்தப்படும்வரை என்றுமே இப்பிரச்சினை சவால் விடும் பிரச்சினையாகவே சிறிலங்கா அரசிற்கிருக்கும்.

# இந்தியாவில் நிலையான ஆட்சிக்கு ஜனாதிபதி முறைமை அவசியம்?

பிரித்தானியரால் விட்டுச் செல்லப்பட்ட ஓர் ஒழுங்கான அரசமைப்பற்ற நாடே சுதந்திர இந்தியாவாகும். பிரித்தானியர் தமது தேவைக்கு ஏற்றவகையில் அரசியல், பொருளாதார, நிர்வாக அமைப்பை இந்தியாவில் உருவாக்கினர். பிரித்தானியர் இந்தியாவிற்குப் பொருத்தமான முறைமைகளைப்பற்றிச் சிந்திக்காது தமக்குப் பொருத்தமானதும், தமக்குப் பரிச்சயமானதுமான பாராளுமன்ற ஆட்சி முறையை இந்தியாவில் புகுத்தினர்.

இந்தியாவில் ஏற்பட்டுள்ள இன்றைய நெருக்கடிகளைக் கூர்ந்து நோக்கும் போது பாராளுமன்ற ஆட்சி முறை இந்தியாவிற்கு பொருத்தமற்றது போலவே தோன்றுகிறது.

குடும்ப ஆதிக்கம், சாதி, மதம், இனம, பிரதேசம, இனக்குழுவாதம் போன்ற இழுபறிகளுக்குள் சிக்குண்டுள்ள நாடு இந்தியா. எனவே இங்குள்ள கட்சி அரசியல் என்பது சாதி, இன, மத குடும்பத்தன்மை வாய்ந்தவையாக அமைந்துள்ளனவே தவிர கட்சிக்கு இருக்கக்கூடிய நல்லியல்புகளைக் கொண்டிருக்கவில்லை.

இந்த நிலையில் நேரு குடும்பம் மட்டுமே இந்தியாவை தொடர்ந்து ஆட்சி செலுத்துவதுசாத்தியப்பட்டது. அதாவது பல்வேறு இன, மத. மொழி வேறுபாடுகளின் மத்தியிலான போட்டியில் இறுதியாக அரசியல்வாதிகள் நேரு குடும்பத்திடம் சரண் அடையக்கூடிய சூழல் நிலவுகின்றது

எம். பி மார் நேரு குடும்பத்தைச் சார்ந்திருக்காதவரையும் ஸ்திரமான கபிநெற் ஆட்சி முறையை அமைக்க முடியாது என்ற நிலையே உள்ளது. இது பரம்பரையின் பேரால் திறமையற்ற, தகுதியற்ற ஆட்சியாளரை அரியாசனத்தில் ஏற்றவே உதவுகின்றது.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை இந்தியாவில் கொண்டு வரப்படுமேயானால்இம்முறைமையால் ஓரளவு மாற்றத்தைக் கொண்டுவரலாம்.

**சாரணன்**

நேரு குடும்பத்தின் ஆட்சியின்மீது மக்களுக்கு அதிருப்தி ஏற்படும் கட்டத்தில் மக்கள் வேறொருவரை ஜனாதிபதியாகத் தெரிவுசெய்ய வாய்ப்புண்டு அவ்வாறு தெரிவு செய்யப்பட்டவர் தொடர்ந்து 5வருடங்களுக்குப் பதவியில் இருக்கலாம். பாராளுமன்ற முறையின்கீழ் இடைக்காலத்தில் ஆட்சி கவிழ்வது போல ஜனாதிபதி முறையின் கீழ் இடைக்காலத்தில் ஆட்சியைக் கவிழ்ப்பது இலகுவானதாக அமையாது.

நேரு குடும்பத்திற்கு எதிராக அதிருப்திப்பட்டு பல தடவைகள் எதிராளியினரை மக்கள் ஆட்சிபீடம் ஏற்றியுள்ளனர். ஆனால் இந்தியாவில் பாராளுமன்ற முறையிலுள்ள பலவீனம் அவ்வரசாங்கத்தை நிலைக்கவிடாது தடுப்பதுடன் மீண்டும் நேரு குடும்பத்திடம் மக்களைச் சரணடையவும் செய்துவிடுகிறது.

பாராளுமன்ற ஆட்சிமுறை இங்கிலாந்தில் பலநூற்றாண்டுகால வளர்ச்சிப்படியைக் கொண்டது. அங்கு இருகட்சி ஆட்சிமுறை வளர்ந்துள்ளது. பாராளுமன்ற முறை திறம்படத் தொழிற்பட இருகட்சி ஆட்சிமுறை அவசியம்.

இந்தியா பல வகைகளிலும் பல துண்டங்களாகப் பிளவுபட்ட ஒரு நாடு. அங்கு கட்சி முறையும் பல துண்டங்களாகவே உள்ளன. இதனால் பாராளுமன்ற முறைமை அங்கு திறம்படத் தொழிற்பட முடியாமல் நேரு குடும்பத்தின் எதேச்சாதிகாரம் இறுதியில் கைகூடக்கூடிய நிலையே உள்ளது.

திறமையான தலைவர்கள் தோன்றவும், ஸ்திரமான நல்லரசாங்கங்களை அமைக்கவும் ஜனாதிபதி முறைமை பொருத்தமானதாக அமையலாம். ஜனாதிபதியை எதேச்சாதிகாரியாக ஆக்கக்கூடியவாறு அரசியல் திட்டம் அமையாது ஜனாதிபதியை நிர்வாக அதிகாரம்கொண்ட ஒருவர் என்ற வகையிலான ஓர் அரசியல் அமைப்புத் திட்டத்தினை உருவாக்கினால் நாட்டின் வளர்ச்சிக்குப் பாராளுமன்ற முறையைவிட ஜனாதிபதி முறைமை பயன் உள்ளதாய் அமையும். குறிப்பாக இந்தியாவிற்கு இது காலப் பொருத்தும்.

# பாரதீய ஜனதாவிற்கும் எமக்கும் இரகசிய உடன்பாடு எதுவுமில்லை

## - தேசிய முன்னணி அறிவிப்பு

(டில்லி)

அயோத்தியில் ராமர் ஆலயம் கட்டுவது தொடர்பாக பாரதீய ஜனதாக் கட்சிக்கும். தமக்கும் இடையே எந்தவித இரகசிய ஒப்பந்தமும் இல்லை என தேசிய முன்னணி அரசாங்கம் அறிவித்துள்ளது.

இது தொடர்பாக பிரதம மந்திரியின் அலுவலக அதிகாரி ஒருவர் செய்தியாளர்கள மத்தியில் பேசுகையில் ‘‘அரசாங்கம் தமது கொள்கையில் இருந்து விலகாது’’ எனத் தெரிவித்தார்.

சட்டம், ஒழுங்கிணைப்பின் பற்றுவதாகவும். நீதிமன்றத்தின் இறுதித் தீர்ப்பு வரும் வரையில் இப்போதுள்ள நிலைமையையே அரசாங்கம் பேணும் என்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை பாரதிய ஜனதாக் கட்சியும் இரகசிய ஒப்பந்தம் எதுவும் தமக்கும் தேசிய முன்னணி அரசுக்கும் இல்லை எனத் தெரிவித்தது.

இதற்கிடையில் 12 ஜனதாதள பாராளுமன்ற உறுப்பினர்கள் வி பி. சிங் பதவி விலக வேண்டும் என கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். வி. பி. சிங் பதவி விலகுவதன் மூலம் இடைக்காலத் தேர்தலை தவிர்க்கலாம் எனவும் அவர்கள் கூறினர்.

நேற்று முன்தினம் 100 பாராளுமன்ற உறுப்பினர்கள் வி. பி. சிங்கை சந்தித்து தமது ஆதரவினை தெரிவித்தனர் என்ற செய்தியினை அவர்கள் மறுத்தனர். தொலைக்காட்சியையும், வானொலியையும் தமக்கு சாதகமாக வி. பி. சிங் அரசாங்கம் பயன்படுத்துகின்றது என்றும் மேலும் தெரிவித்தனர்,

# சார்க் நாடுகளின் பிரஜைகள் ஈராக்கால் விடுதலை

(பாக்தாத்)

ஈராக்கின் முக்கிய இடங்களில் பிடித்து வைக்கப்பட்டிருந்த ‘சார்க்’ அமைப்பு நாடுகளின் பிரஜைகள் விடுதலை செய்யப்படுவர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் செல்வதற்கு வசதியாக ஈராக்கின் தலைநகரான பாக்தாத்திற்கு அழைத்து வரப்பட்டுள்ளனர்.

# தெகிரானில் பிரிட்டனின் தூதுவராலயம் மீண்டும் திறப்பு

(லண்டன்)

ஈரானின் தலைநகர் தெஹிரானில் பிரித்தானியாவின் தூதரகம் மீண்டும் திறக்கப்பட்டுள்ளது.

கடந்தவருடம் மார்ச்மாதத்தில் சல்மான் ருஷ்டியின் நூல் சம்பந்தமாக ஏற்பட்ட பிரச்சினையைத் தொடர்ந்து இரு நாடுகளுக்கும் இடையே ராஜீயத்துறையில் தொடர்புகள் முறிந்திருந்தன.

ஆனால் கடந்த மாதத்தில் ஏற்பட்ட ராஜீயத் தொடர்பினை அடுத்து நேற்றுமுன் தினம் தெஹிரானில் பிரித்தானியத் தூதரகம் திறக்கப்பட்டது.

அதேபோல லண்டனிலும் ஈரான் தூதரகம் நேற்று மீண்டும் திறக்கப்பட்டது.

# டாக்கா பல்கலைக்கழகத்தில் குண்டு வெடிப்பு; 5பேர் பலி

(டாக்கா)

பங்களாதேஷின் தலைநகரமான டாக்காவில் உள்ள பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற இரண்டு குண்டுவெடிப்புச்சம்பவத்தின் போது ஐந்து பேர் கொல்லப்பட்டனர்,

பல்கலைக்கழக வளாகத்தினுள் வைக்கப்பட்ட இரண்டு குண்டுகளும் ஒன்றாக வெடித்ததில் ஒரு மாணவர் உட்பட ஐந்துபேர் கொல்லப்பட்டனர்.

பல்கலைக்கழக நூலகம், மற்றும் பல கட்டடங்கள் எரிந்த நிலையில் உள்ளதாகவும் டாக்கா பொலிஸார் தெரிவித்தனர்.

### ராமஜென்மபூமி - பாபர் மசூதி பிரச்சினை

# உத்தர பிரதேசத்தில் பதற்றம்; ஒரு லட்சம் இந்துக்கள் கைது


(புதுடில்லி)

ராமஜென்ம பூமி - பாபர் மசூதி பிரச்சினை தொடர்பாக உத்தரப் பிரதேசத்தில் பல இடங்களில் பதற்றநிலை நிலவியதன் காரணமாக லக்னோவில் நேற்றுக் காலவரை யறையற்ற ஊரடங்குபிறப்பிக்கப்பட்டது. இதேவேளை ராம ஜென்ம பூமிக்குச் செல்லும் பதின்மூன்று வழிகளும் அடைக்கப்பட்டுள்ளன. உத்தரப்பிரதேசத்தில் ஒரு இலட்சத்துக்கும் அதிகமானோர் கைது செய்யப்பட்டனர். ஆத்திரமடைந்த இந்துக்கள் சட்ட சபையின் முன் ஆர்ப்பாட்டம் செய்தபோது காவற்படையினர் கண்ணீர்ப்புகை, குண்டாந்தடிப் பிரயோகம் செய்து கூட்டத்தைக் கலைத்தனர்.

ராஜ்பூரில் நிகழ்ந்த கலவரங்களின்போது ஒரு மாவட்ட நீதிபதி உடபட மூன்றுபேர் உயிரிழந்தனர்.

பாரதீய ஜனதாக்கட்சியைச் சேர்ந்த மொரர்கோத்ரா தலைமையில் சென்ற எட்டு எம். பிகளும், மற்றும் சட்ட சபை உறுப்பினர்களும், ஆதரவாளரான ஐயாயிரம்பேரும் நேற்றுக் கைது செய்யப்பட்டதாக அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

பாரதீய ஜனதாக்கட்சியின் தலைவர்களில் ஒருவரான வாஜ்பாய் மத்தியப்பிரதேசம், ராஜஸ்தான் ஆகிய மாநிலங்களுக்கு நேற்றுச்சென்று திரும்பினார். வழியில் ஏற்பட்ட தடங்கலால் லக்னோவிற்கான அவர் பயணத்தில் தாமதமேற்பட்டது. மாலையில்வாஜ்பாய் கைதுசெய்யப்பட்டார்.




### ஆசிரியர்களுக்கு கல்விப் பணிப்பாளர் வேண்டுகோள்

# சூழவுள்ள மாணவர்களுக்கு பாடத்திட்டப்படி கல்வி புகட்டுக

(யாழ்ப்பாணம்)

வடபகுதியில் தற்போது நிலவும் சீரற்ற நிலைமையும் விமானக் குண்டு வீச்சுகளும் பாடசாலைகளை முன்பு போல ஒழுங்காக நடத்துவதற்கு முடியாத சூழ்நிலையே உள்ளது. இந்த நிலை எவ்வளவு நாட்களுக்கு தொடரும் என்று எம்மால் கூறமுடியாது.

ஆதலால் குறிப்பிட்ட ஒவ்வொரு கிராமங்களிலும், வீதிகளிலும் உள்ள ஆசிரியர்கள் ஒன்று சேர்ந்து தமக்குள்ளே கலந்துரையாடி தமது பகுதியில் உள்ள மாணவர்களை சேர்த்து அந்த மாணவர்கள் எந்தப் பாடசாலையில் கல்வி பயின்றவர்களாக இருந்தாலும் தடைப்பட்டுள்ள பாடத்திட்டத்திற்கு அமைய பாடங்களைக் கற்பிக்க வேண்டும். இதுவே எமது மாணவர்களை இந்த போராட்ட உச்ச சூழ்நிலையிலும் வளர்ப்பதற்குரிய ஒரே வழியாகும் என்று வடமாகாண கல்விப் பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கம் அறிவித்துள்ளார்.

மேலும் அவர் இவ்விடயம் பற்றிக் கூறுகையில் ஒவ்வொரு கிராமத்திலும் உள்ள மக்கள் இவ்வாறு தன்னிச்சையாக ஒன்று சேர்ந்து மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு பாடுபடும் ஆசிரியர்களின் முயற்சிக்கு பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனவும் அவர் வேண்டிக் கொண்டார்.

இறுதியாக யுத்தகாலத்தில் எமது சிறுவர்களின் மனோநிலை ஏக்கமடையாதவாறு பாதுகாப்பதுடன் அதேநேரம் காலத்துக்கேற்றவாறு கல்வியறிவையும் வளர்ப்பது ஒவ்வொரு பிரதேசத்திலும்உள்ள ஆசிரியர்கள், ஒய்வு பெற்ற ஆசிரியர்கள் தாய் தந்தையர் ஆகியோரின் தலையாய கடமையாகும்என்றும் சுந்தரலிங்கம் தெரிவித்தார்.

இதேவேளை இன்று தொடக்கம் யாழ். கனகரத்தினம் மகாவித்தியாலயத்தில் நடைபெறுகின்ற சேவைக்கால ஆலோசகர்களுக்கான கலந்துரையாடலில் இருந்து வெளியிடப்படும் கைநூல் அனைத்து ஆசிரியர்களுக்கும் வழங்கப்பட இருப்பது குறிப்பிடத்தக்கதாகும். (லோ)

## தமிழிலேயே சுற்றறிக்கை அனுப்புக

(கண்டி)

ஹற்றன் நுவரெலியா கோட்டக் கல்வி அலுவலகத்திற்கு உட்பட்ட தமிழ் பாடசாலைகளுக்கு தமிழ் மொழி மூலமே சுற்றறிக்கைகள் அனுப்பப்பட வேண்டும் என மத்திய மாகாணசபை உறுப்பினர் வீ. கந்தையா மத்திய மாகாணசபை கல்வி அமைச்சரிடம் கேட்டுக் கொண்டிருக்கிறார்.

இப் பகுதிகளில் 80 வீதத்திற்கும் அதிகமான பாடசாலைகள் தமிழ் மொழி மூலமானவைகளாக இருந்தும் இவைகளுக்கு அனுப்பப்படும் சுற்றறிக்கைகள் அனைத்தும் சிங்கள மொழியில் மட்டுமே உள்ளது என்றும் அவர் கூறினார்.

# நேற்று சமுகம் கொடுக்காதோர் இன்று சமுகம் தரவும்

(யாழ்ப்பாணம்)

அரசதிணைக்களங்கள்,கூட்டுத்தாபனங்கள்ஆகியவற்றின் பணக்கொடுப்பனவு தொடர்பாகஏற்கனவேசெய்துகொண்டஏற்பாட்டிற்கமையமேற்படிதாபனங்கள், திணைக்களங்களின் அதிகாரிகள் இலங்கை வங்கி ஆஸ்பத்திரி வீதிமேற்தரக்கிளையின் பிரதானமுகாமையாளரை நேற்று திங்கட்கிழமை சந்திக்கத்தவறிவிட்டார்களாம். நேற்றையதினம் சமுகம்தரத் தவறியவர்கள் இன்று செவ்வாய்க்கிழமை காலை 7 மணியளவில் தவறாது வங்கிக்கு சமுகமளிக்கும்படி பிரதம முகாமையாளரின் செய்திக்குறிப்பொன்று தெரிவிக்கிறது.

---

**அவசர**

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

நோயாளர்களுடன் செல்பவர்கள் யாழ். நகரை விட்டு வெளியேறுவதற்கான அனுமதியினைப் பெற்றிருத்தல் வேண்டும் எனவும் இவர்கள் தமது பிரயாணத்தை அத்தாட்சிப்படுத்த பணிப்பாளரிடம் நேரடியாக வந்து கடிதமொன்றைப் பெற்றுக்கொள்ளும்படியும் கேட்கப்பட்டுள்ளனர்.

பின்வரும் நோயாளர்கள் எதிர்வரும் வியாழக்கிழமை காலை 7மணிக்கு முன்னதாக சிறிலங்கா செஞ்சிலுவைச் சங்க காரியாலயம் யாழ். கிளை, கண்டி வீதி, கச்சேரி அல்லது மானிப்பாயில் இயங்கும் யாழ். போதனா வைத்தியசாலைக்கு பிரயாணவசதிகளுடன் சமுகமளிக்கும்படி கேட்கப்படுகின்றனர்.

எஸ். யாசீன் (யாழ்ப்பாணம்) எஸ். கசுபதிதேவி (மாங்குளம்)ஆர். தேவரட்ணம்(சாவகச்சேரி) ஹேமா குணரட்ணம் (பரந்தன்) சி யோகநாதன் (சுன்னாகம்) மென்சில் (மானிப்பாய்) கே. கணபதிப்பிள்ளை (கரவெட்டி) டாக் வி. கிருஷ்ணராஜா(யாழ்) ஆர். கமலாம்பிகை (மானிப்பாய்) நாகம்மா (கோப்பாய்) பி. மாணிக்கம் (கோண்டாவில்) பேரின்பநாயகி (புத்தூர்) வசந்தி (வல்வெட்டித்துறை) சுபேந்திரலிங்கம் (அல்வாய்)எஸ் சத்தியபாமா (தெல்லிப்பளை)ரி. சிவதாசன் (சுண்டுக்குளி)ஆர். பாலதாசன் (மீசாலை) ஆர். அரியராசா (சுண்டுக்குளி) ஆர். அருமைமூத்து (மருதனாமடம்) எஸ் சிவசுப்பிரமணியம் (கொக்குவில்)என். குமரகுரு (சாவகச்சேரி) ஈ. ரோய் (யாழ்ப்பாணம்) எம். மகாலிங்கம் (மானிப்பாய்) ஞானரத்தினம் (பாஷையூர்) பாக்கியவதி (மீசாலை) (ச)

---

**சார்க்**

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

மாநாட்டிற்கு சமுகமளிக்கமாட்டார் என்பதை மாலை தீவு ஜனாதிபதி அப்துல் கயூமிற்கு தெளிவுபடக் கூறியிருப்பதாகவும் தெரிவித்தார்.

அதேவேளை ஜனாதிபதியின் சார்பாக பிரதம மந்திரி டி. பி. விஜயதுங்கா அந்த மாநாட்டில் கலந்துகொள்வார்.

---

**கல்வித்**

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கல்விப் பணிப்பாளர் ஆர். சுந்தரலிங்கம் மாத்திரம் கடமை காரணமாக வெளியில் சென்றிருந்தார். ஆசிரியர்கள் அதிகாரிகள் வருகைக்காக காத்திருந்தனர்.

---

**இரண்டு**

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

லங்கா இராணுவத்தினர் மீது தமிழீழ விடுதலைப் புலிகளால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இத் தாக்குதலால் ஏற்பட்ட சேத விபரங்கள் தெளிவாகத் தெரியவில்லை. இச் சண்டை காலை 8.30 மணியில் இருந்து 9.40 மணிவரை நடைபெற்றது.

அதேவேளை, இச் சண்டையில் பதின்மூன்று பேர் படுகாயமடைந்ததாகப் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளபோதும் பலர் இறந்தும் பதினைந்திற்கு மேற்பட்டோர் படுகாயமடைந்தும் உள்ளனர் என்று சுயாதீனமான செய்திகள் தெரிவிக்கின்றன.

இத் தாக்குதலின் போது தமிழீழ விடுதலைப் புலிகள் தரப்பில் மேஜர் கண்ணன் (செல்லையா - உதயன்) பிருந்தன் (செங்கலடி), சங்கர் (படுவான்கரை) ஆகிய மூவரும் வீரமரணமடைந்தனர்.

இவர்களுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவிக்கின்றனர். (மு)

---

**அதிகாரியை**

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

உணவுப் பங்கீட்டு அட்டை மற்றும் முக்கிய ஆவணங்களை மீட்டு வருவதற்காக சென்ற பொ. சீவரட்ணம் என்பவரை அங்கு நின்ற இராணுவத்தினர் கைது செய்த போது காவலில் நின்ற விடுதலைப் புலிகள் இராணுவத்தினரை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். இச் சம்பவத்தில் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து அப்பகுதியில் நின்ற ஏனைய சிப்பாய்கள் பீதியடைந்து ஓட்டம் எடுத்தனர்.

பதட்டமடைந்து நிலை தடுமாறி நின்ற இராணுவக் கொமாண்டரை மேற்படி கைதுசெய்யப்பட்ட நபர் பலமாகத் தாக்கிவிட்டு சாதுரியமாகத் தப்பி வந்துள்ளார்.

இச் சம்பவத்தில் இவர் தன்னிடம் இருந்த சில ஆவணங்களை இழந்துள்ளார். (க)

---

**முற்றுகையிட**

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வத்தினரைவெருகலில்இருந்து அரைமைல் தூரத்திற்கு முன் சென்று விடுதலைப் புலிகள் தாக்குதலை மேற்கொண்டனர்.

பிற்பக்கமாக வந்த இராணுவத்தினரையும் புலிகள் எதிர்கொண்டு தாக்குதலை நடாத்தினர். அப்பகுதியில் புதைத்து வைக்கப்பட்டிருந்த மிதிவெடிகள் அச்சமயம் வெடிக்கஆரம்பித்ததும் இராணுவத்தினர் பின்வாங்கிச் சென்றனர். இம் மிதிவெடிகளில் பல இராணுவத்தினர் சிக்குண்டனர்.

இத்தாக்குதல்களால்பெரும் இழப்புகளுடன் இராணுவம் பின்வாங்கிச் சென்றது. இராணுவத்தரப்பில் ஏற்பட்ட இழப்பு விபரங்கள் தெரியவில்லை. (மு)

---

**படையினரின்**

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

குடியிருப்பு சிறிலங்கா இராணுவத்தினரின் காவல் சோதனைமுகாமில் இடம்பெற்றது.

மேற்படி சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது இறந்தவர்களும், தாக்கப்பட்டவர்களும் ஏராளமான மின்கலங்களைக் கொண்டு பூந்தோட்டம் பொதுச் சந்தைப் பகுதிக்கு வரமுயன்ற போது அவர்களை சோதனையிட்ட இராணுவத்தினர் அவர்களிடம் பெருந்தொகையான மின்கலங்கள் காணப்பட்டதை அடுத்து மிருகத்தனமாக மூவரையும் நையப்புடைத்தனர்.

தாக்குதலுக்குஉள்ளானவர்களில் ஏ.வாஹித் என்ற மகாறம்பைக்குள வாசி இறந்தார் என்றும் கபூர் (வேப்பங்குளம்), தர்விஷ் (மகாறம்பைக்குளம்) என்பவர்கள் படுகாயமடைந்தனர்' என்றும் தெரிவிக்கப்பட்டது. (தி)

---

**ஊர்காவற்படை**

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ரின் காவல் அரண் மீது நேற்று முன் தினம் தமிழீழ விடுதலைப் புலிகளால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. அச் சமயம் ஊர்காவற்படைக்கு உதவியாக ஒட்டமாவடி இராணுவ முகாமில் இருந்து வந்த இராணுவத்தினர் மீதும் விடுதலைப் புலிகள் தாக்குதலை மேற்கொண்டனர்.

இத் தாக்குதல்களால் ஊர்காவற்படை, இராணுவத்தரப்பில் பெரும் இழப்புகள் ஏற்பட்டதாகத் தெரிய வருகிறது. சேத விபரங்கள் தெரியவில்லை. (மு)

---

**முல்லைத்தீவு**

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

முன்னேற முயன்ற சிறிலங்கா இராணுவத்தினர் மீது தமிழீழ விடுதலைப்புலிகள் குறிபார்த்துச் சுட்டதில் இராணுவத்தில் ஒருவர் பலியானார்.

இதையடுத்து அவ்விடத்தில் இருந்து இராணுவம் பின்வாங்கிச்சென்று மூகாமினுள் முடங்கியது.

இதனைத்தொடர்ந்து இராணுவ முகாமில் இருந்து சிலாவத்தைப் பக்கமாக இராணுவத்தினரால் தொடர்ச்சியாக ஷெல்த்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இத்தாக்குதலால் பன்னிரெண்டு வீடுகள் சேதமடைந்துள்ளன. (மு)

---

**மேஜர்**

படைகளுடனான ஏராளமான தாக்குதல்களில்பங்கேற்றவர். பல தாக்குதல்களைத் தலைமைதாங்கி நடாத்தி சாதனை படைத்தவர்.

கல்முனை இராணுவமுகாம் தாக்குதலுக்கு இவரே தலைமை தாங்கினார். இத்தாக்குதலின் போது இராணுவமுகாம் முற்றாக அழிக்கப் பட்டதுடன், இம் மூகாமில் இருந்து பெருமளவு ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன. பெரும் எண்ணிக்கையான சிறிலங்கா இராணுவத்தினரும் கொல்லப் பட்டனர், இதுபோன்ற பல தாக்குதல்களைத் தானே முன்னின்று வழிநடத்தி பெரு வெற்றிகளைக் கண்ட இவர் இந்திய இராணுவத்தினருக்கும், தமிழ் தேசிய இராணுவத்தினருக்கும் எதிராக பல தாக்குதல்களைத் தலைமை தாங்கி நடாத்தி எதிரிப்படைகளைத் திக்குமுக்காடச் செய்தவர் ஆவார். (மு)

---

**எந்த**

இந்தியாவில் ஆட்சிமாற்றத்தால்இலங்கை சம்பந்தமான கொள்கைமாறலாம் அதனால் இலங்கைக்கு பாதிப்புவருமா? என பத்திரிகையாளர் கேட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் ரஞ்சன் இவ்வாறு தெரிவித்தார். மேலும் அவர் பதிலளிக்கையில் கடந்த இரண்டு வருடங்களாக பல பிரச்சினைகளுக்கு தாம் முகம் கொடுத்துள்ளதாகவும், இப்பொழுது வளைகுடாப்பிரச்சினைக்கு மூகம் கொடுத்துள்ளதாகவும், தெரிவித்ததோடு எந்தப்பிரச்சினைக்கும் முகம் கொடுக்க தம்மிடம் சிறந்த தலைமை உள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

---

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி, 31-ஆம் இலக்கத்திலுள்ள '' ஈழநாதம் '' பணிமனையில் 1990 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 30 ஆம் தேதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.